ஆனால் நேற்று விவாதம் நடந்தது வெள்ளை அறிக்கையின் மீது. எனவே, அதிலே அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பேச்சை முடித்துவிட்டார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : இல்லை. அமைச்சர் பேசி முடிக்கவில்லை. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவை முடிந்தபோது நானும் அவையிலே இல்லை. ஆனால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டேன். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா என்று...... (குறுக்கீடுகள்)...... அதாவது ஒரு பிரச்சினையிலே அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு ஒரு உறுப்பினர் ஏதேனும் ஐயம் கேட்கின்றபோது அதையும் அனுமதித்து, அவ்வாறு அதை அனுமதித்த பிறகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொல்வது என்பதுதான் நடைமுறை. அந்த முறை காப்பாற்றப்பட வேண்டும் என்ற அளவில் ஒத்துக் கொள்கிறோம். எனவே, இனி எதிர்காலத்திலே இப்படிப்பட்ட சூழ்நிலை அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பியது போன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்கின்ற வகையிலே, இருசாராரும் ஒப்புக் கொள்கின்ற நிலைமையில் ஏற்பாடுகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் எடுத்துக் கொள்வார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்.

அவை நிகழ்ச்சி தொலைகாட்சியில் தவறாக ஒலிபரப்பப்பெற்றது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் இரவு 9.00 மணிக்குத் தொலைக்காட்சியில் செய்தி அறிவிக்கப்படுவதை நாம் அறிவோம். அப்படி வாசிக்கப்படும் போது நேற்று முன்தினம் ஒரு தவறு நடைபெற்றது ; நேற்றும் ஒரு தவறு நடைபெற்றது. சபையினுடைய நிகழ்ச்சியைத் தவறுதலாக அறிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10·30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் என்ன தவறு என்று எழுதிக் கொடுப்பார்களானால் அதைப் பரிசீலித்துப் பார்க்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : முதலமைச்சர் சொன்னதைத் தவறாக அறிவித்திருக்கிறார்கள். மாநகராட்சியில் ரூபாய் 1,000 கோடிக்குத் திட்டங்கள் திட்டப்பட்டு செய்யப்படவிருக்கின்றது என்று அறிவித்தார்கள். முதலமைச்சர் அவ்வாறு சொல்லவில்லை எங்கே போவது ரூபாய் 1,000 கோடிக்கு என்றுதான் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன். எழுதிக் கொடுங்கள், பரிசீலிக்கிறேன் என்று.